<u>கொடைக்கானல் நகராட்சி</u>

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III–ன் பிரிவு 2–ன் கீழ் 19.10.2022ஆம் நாள் புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள்.19.10.2022

**பொருள் எண் – 1)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் ஏற்கனவே உள்ள LED அல்லாத 1918 எண்ணம் மின் விளக்குகளை LED மின் விளக்குகளாக மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022–23 திட்டத்தின் கீழ் முழு கடனாக ரூ. 237.83 இலட்சம் மதிப்பீட்டில் மாற்றம் செய்திட அரசாணை நிலை எண். 145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ.2) நாள். 14.10.22ல் நிதி ஒதுக்கீடு செய்த அரசாணை பெறப்பட்டுள்ளது. அரசாணையில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடம் 5 விழுக்காடு வட்டியுடன் 6 ஆண்டுகளில் திருப்பி செலுத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு உரிய பிரேரணையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) நிர்வாக அனுமதி பெற பிரேரணை அனுப்பிட அனுமதிக்கலாம். கடன் தொகையினை நகராட்சி நிதியின் மூலம் திருப்பி செலுத்திட அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **193, நாள். 19.10.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | 1. பதிவு செய்யப்பட்டது.<br>2. அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 2)**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்காகவும், உள்ளாட்சி அமைப்புகளில் குடிமக்களின் பங்களிப்பினை உறுதி செய்திடவும், **தற்போது தேர்தெடுக்கப்பட்டுள்ள நகர்மன்ற உறுப்பினர்களை தலைவர்களாக கொண்ட வார்டு குழுக்கள் மற்றும் பகுதி சபாக்கள் உருவாக்கிடவும்,** இதர உறுப்பினர்களை நகர்மன்றம் நியமனம் செய்திடவும், வார்டு குழுக்கள் மற்றும் பகுதி சபாக்கள் கூட்டங்கள் நடத்திடவும் தமிழக அரசால் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

2) அதனை தொடர்ந்து முதன்மை செயலர் / ஆணையர், சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை ஆகியோர்களுக்கு மேற்படி சட்டத்திற்குரிய விதிமுறைகளை உருவாக்கிட அரசால் உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, சமர்ப்பிக்கப்பட்ட விதிகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, **அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.06.2022** மற்றும் தமிழ்நாடு அரசிதழில் சிறப்பு வெளியீடு எண். **358 நாள். 24.06.2022**ல் **தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 (வார்டு குழு மற்றும் பகுதி சபா) வெளியிடப்பட்டும், மேற்படி சட்டம் 24.06.2022 முதல் நடைமுறைக்கு வருவதாகவும் உத்திரவிடப்பட்டுள்ளது.**

3) அரசாணை (நிலை) எண். **93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.06.2022** ல் **வார்டு குழுக்கள் மற்றும் பகுதி குழுக்களின் செயலர்களை நியமிப்பது தொடர்பாகவும், செயலர்களின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள் குறித்தும்** ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4)அரசாணை (நிலை) எண்கள். 92 மற்றும் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.358 நாள்.24.06.2022 ஆகியன மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.3706/2017/எப்.1)**

<u>அலுவலகக் குறிப்பு</u>

**1)** அரசாணைகள் மற்றும் அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ள **தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 (வார்டு குழு மற்றும் பகுதி சபா)** ஐ நகர்மன்றம் பதிவு செய்யலாம்.

**2) தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகளின் படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அரசிதழ் வெளியிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | 194, நாள். 19.10.2022 |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | 1. பதிவு செய்யப்பட்டது.<br>2. அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 3)**

மிஷன் இயக்குநர் மற்றும் நிர்வாக இயக்குநர், தேசிய சுகாதார பணிகள் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 1869/NUHM/SHS/நாள். 28.06.2022 ல் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் (National Urban Health Mission-NUHM 22-23) ன் கீழ் கொடைக்கானல் நகரில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு பணி தேர்வு செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி கொடைக்கானல் நகரம், வார்டு –டி, பிளாக் 18, நகரளவு எண். 15, ஆனந்தகிரி 4வது தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | கொடைக்கானல் நகரம், வார்டு –டி, பிளாக் 18, நகரளவு எண். 15, ஆனந்தகிரி 4வது தெருவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் | 120.00 |

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **195, நாள். 19.10.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–பா.செல்லத்துரை
நகர்மன்றத் தலைவர்,
**கொடைக்கானல் நகராட்சி.**

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.